29.08.2025

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை நேரு யுவகேந்திராவும், உடற்கல்வியியல் துறையும் மற்றும் நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து விளையாட்டு வீரரான மேஜர் தயான் சந்த் பிறந்த தினத்தை 29.08.2025 அன்று தேசிய விளையாட்டுத் தினமாக இந்தியா முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் கல்லூரியன் அறங்காவலர் முனைவர் கவிதா சுப்ரமணியன் கலந்து கொண்டு 'நடைமாரத்தான்' மேற்கொள்ளும் மாணாக்கர்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்விற்கு முன்னதாக அவர்தம் உரையில் மாணவர்கள் விளையாட்டில் நாட்டம் கொள்ள வேண்டும். அது உடலையும் மனதையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவுகின்றது. படிக்கும் காலத்தில் விளையாடும் பொழுது விளையாட்டை ஒரு பொழுதுபோக்காக கருதாமல் சாதிக்க வேண்டும் என்ற இலக்குடன் விளையாட வேண்டும். அப்பொழுதுதான் நம்மை உலகளவில் சிறந்த விளையாட்டு வீரராக முன்னிலைப்படுத்தும். ஆகவே விளையாட்டில் கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வாழ்த்திப் பேசினார்.

பின்பு விளையாட்டு மைதானத்தில் மாணவர்களுக்கு ஓட்டப்பந்தயம், கபடி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் பாராட்டிச் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வில் YRC மாவட்ட அமைப்பாளர், எனது இளைய பாரதம் நமச்சிவாயம், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் இரா.மணிமாறன், உடற்கல்வியியல் துறைத்தலைவர் முனைவர் கே.ஜெகதீஸ் பாபு ஆகியோர் உடன் இருந்தனர். இப்போட்டியை உடற்கல்வியியல் துறை ஏற்பாடு செய்திருந்தனர்.